# கலைஞரும் நானும்

86

"கலைஞரின் தமிழை வாசித்து, தமிழைப் பேசி வளர்ந்த தலைமுறையைச் சேர்ந்தவர்களில் நானும் ஒருவன். என்னிடம் எப்போதும் தனிப்பட்ட பாசம் காட்டிய தலைவர் அவர்", என தனது நினைவுகளைப் பகிர்கிறார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியப் பொதுச் செயலாளர் டி.ராஜா.



# "எங்கள் குடும்பத்தில் ஒருவர்!"

**டி.ராஜா,** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசியப் பொதுச் செயலாளர்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை எனது மாணவப் பருவத்தில் இருந்தே அறிவேன். நேரடியாகப் பார்ப்பதற்கு முன்னரே, அவரது எழுத்துகளை வாசித்தவன், வசனங்களைப் பேசியவன் நான். இன்றைக்குக் கூட அவரது வசனங்களைச் சரளமாக என்னால் பேச முடியும்.

1968-ஆம் ஆண்டு, அண்ணாவின் அமைச்சரவையில் கலைஞர் பொதுப்பணித்துறை அமைச்சராக இருக்கும்போது முதன்முதலில் நேரில் பார்த்தேன். அப்போது, குடியாத்தம் நகரில் கல்லூரிப் படிப்புப் படித்துக் கொண்டிருந்தேன். அங்கு அரசு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக வருகை தந்த, அமைச்சர் கலைஞரை, ஆர்வம் மிகுதியில் சென்று பார்த்தேன். மக்களோடு மக்களாக நின்று அவர் உரையைக் கேட்டு மகிழ்ந்தேன். அதன்பின்னர், கலைஞரின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கவனித்து வருபவனாக இருந்திருக்கிறேன்.

### ஐக்கிய முன்னணி அரசியல் களம்

அரசியலில் நேரடியாக ஈடுபட்ட காலங்களில், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கல்யாணசுந்தரம், பி.மாணிக்கம், நல்லகண்ணு ஆகிய தோழர்களுடன் சென்று, கலைஞரைப் பலமுறை சந்தித்திருக்கிறேன். என்றாலும், அப்போதெல்லாம் நெருக்கமாகப் பழக்கமில்லை.

1996-ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில், கலைஞருடன் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு அமைந்தது. அப்போது, நான் டெல்லி அரசியலில் இருந்தேன். ஐக்கிய முன்னணி ஆட்சி அமைந்தபோது, அதை உருவாக்கியவர்களில் ஒருவராக கலைஞர் இருந்தார். ஐக்கிய முன்னணியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் அனைத்திலும், நான் கலைஞருக்குப் பக்கத்தில்தான் இருப்பேன். அப்போது எங்கள் கட்சியின் பொதுச் செயலாளராகத் தோழர் இந்திரஜித் குப்தா இருந்தார். அவர்கள் இருவருக்கும் இடையிலான உரையாடலை, நான் மொழி பெயர்த்துச் சொல்வேன். ஐக்கிய முன்னணியின் தேவகவுடா ஆட்சியில் உள்துறை அமைச்சராக இருந்தவர் இந்திரஜித் குப்தா.

பிரதமராக யாரைத் தேர்வு செய்யலாம் எனப் பேச்சு நடந்தபோது, சமூகநீதிக் காவலர் வி.பி. சிங் அவர்களைப் பிரதமராக்க, கலைஞர் விரும்பினார். அதற்கான முயற்சிகளையும் எடுத்தார். ஆனால், வி.பி.சிங் அவர்கள் பிரதமர் வாய்ப்பினை ஏற்க மறுத்து விட்டார். "பொதுப் பதவிகளை ஏற்பதில்லை என ஏற்கெனவே அறிவித்து விட்டேன். அதனால், மீண்டும் அரசியல் வாழ்க்கைக்கு வர விரும்பவில்லை" என அவர் கலைஞரிடம் தெரிவித்தார். அந்தச் சூழ்நிலையில் கலைஞருடன் பயணித்தவர்களில் நானும் ஒருவன்.

### சென்னை பெயர் மாற்றம்

ஐக்கிய முன்னணி ஆட்சி அமைந்த சில மாதங்களிலேயே, 'மெட்ராஸ்' என அழைக்கப்பட்டு வந்த சென்னை நகரின் பெயரை, மாற்றுவதற்கான அறிவிப்பினை வெளியிட்டார் கலைஞர். அந்த பெயர் மாற்றத்தை உள்துறை அமைச்சகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்காகத் தோழர் இந்திரஜித் குப்தா அவர்களிடம் விளக்கமாக எடுத்துச் சொல்ல வேண்டும் என, ஒருநாள் அதிகாலையிலேயே எனக்கு தொலைபேசி செய்தார் கலைஞர்.

அந்தப் பெயர் மாற்றம் எவ்வளவு தேவையானது, எப்படிச் சரியானது என விளக்க வேண்டும் எனக் குறிப்புகள் கொடுத்தார். "என் பெயரை, 'கருணாநிதி' என தமிழில் எழுதுகிறோம், அதையே ஆங்கிலத்திலும் 'கருணாநிதி' என்றுதான் எழுதுகிறோம். ஆனால், சென்னை மட்டும் தமிழில் சென்னையாகவும், ஆங்கிலத்தில் மெட்ராஸாகவும் நீடிச்சிக்கிட்டு இருக்குதே ராஜா. இதை இந்திரஜித் அவர்களிடம் விளக்கமாக எடுத்துச் சொல்லி, அந்தக் கோப்புக்கு விரைவில் ஒப்புதல் அளிக்கச் சொல்லவும்" எனக் கூறினார்.

கலைஞர் ஒரு முடிவு எடுத்துவிட்டால், அதை நிறைவேற்றுவதில் உறுதியுடன் இருப்பார் என்பதற்கு அதுவும் ஒரு சான்று.

அதிகாலையில் அழைப்பார். நான் வீட்டில் இல்லை என்றாலும், துணைவியாரிடம், "ராஜா வந்ததும் அழைக்கச் சொல்லுங்க" எனக்கூறி இருப்பார். நான் அவருக்கு அழைத்துப் பேசுவேன். அந்தக் காலகட்டத்தில் கலைஞருடன் மிக நெருக்கமான பழக்கத்தில் இருந்தேன். கலைஞரின் வாழ்த்துகளோடும், அன்போடும்தான் முதன்முதலில் மாநிலங்களவை உறுப்பினரானேன்.

> **"பேனா பிடித்து எழுதினால்தான், அந்தச் சிந்தனை ஓட்டம் அப்படியே தொடரும். சங்கிலிபோல ஒன்றோடொன்று தொடர்ந்து வரும் ராஜா!"**

### கலைஞர் வசனங்கள்

அவருடனான உரையாடலின்போதும், சில நேரங்களில் அவர் எழுதிய வசனங்களைப் பேசிக் காட்டுவேன். 'மனோ கரா', 'பராசக்தி' வசனங்கள் எல்லாம் எனக்கு அத்துப்படி. அதைக் கேட்டு ரொம்பவே மகிழ்ச்சி அடைவார்.

தொடர்ச்சியாக அவர் எழுதிக் கொண்டிருப்பது குறித்த பேச்சு வந்தபோது, "இந்த வயதிலும் நீங்கள் ஏன் பேனா பிடித்து எழுத வேண்டும். நீங்கள் சொல்லச் சொல்ல யாரையாவது எழுத வைக்கலாம் அல்லவா?" எனக் கேட்டேன்.

"பேனா பிடித்து எழுதினால்தான், அந்தச் சிந்தனை ஓட்டம் அப்படியே தொடரும். சங்கிலிபோல ஒன்றோடொன்று தொடர்ந்து வரும் ராஜா" என அதற்கு விளக்கம் கொடுத்தார். நேரம் கிடைத்தால், இந்த மாதிரியான உரையாடல்கள் எல்லாம் தொடரும்.

### வரலாற்றை மாற்றியவர்

2007-ஆம் ஆண்டில், இந்தியாவின் குடியரசுத் தலைவராக பிரதிபா பாட்டீல் தேர்ந்தெடுக்கப் பட்டதில் கலைஞரின் பங்கு அதிகம். இந்தியாவின் முதல் பெண் குடியரசுத் தலைவரானவர் பிரதிபா பாட்டீல். அப்போது, குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் சூழல் அமைந்தபோது, காங்கிரஸ் மூத்த தலைவர்களிடம் "கலைஞர் மூத்த தலைவர், அவர் ஆலோசனை கேட்டு முடிவு செய்யலாம்" என எனது கருத்துகளைப் பதிவு செய்துள்ளேன். பிரதிபா பாட்டீல் தேர்வு, கலைஞர் யோசனைப்படிதான் நடந்தது. சுதந்திரம் கிடைத்த 50 ஆண்டுகளுக்குப் பின்னரே, 'இந்தியாவுக்கு முதல் பெண் குடியரசுத் தலைவர்' என்கிற வரலாறு அமைந்தது. அதற்கு கலைஞரே காரணமாக இருந்தார்.

கலைஞரின் டெல்லிப் பயணங்களின்போது, நான் சந்திக்காமல் இருந்ததில்லை. அரசியல் கூட்டணிகள் மாறிய காலத்திலும், அரசியல் நட்பு சக்திகளைப் பேணியவர் அவர். அவருடன் பல மேடைகளைப் பகிர்ந்துள்ளேன். அரசியல் களத்தில் நின்றிருக்கிறேன். ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில், அரசியல் அமைப்பை அனைத்து மக்களுக்கும் ஜனநாயகப்படுத்துவதில், அவரது சிந்தனைகள் ஈடு இணையற்றவை. அந்த வகையில், அவர் சமூகப் போராளியாக வாழ்ந்தவர்.

என்னுடன் பிறந்தவர்கள் ஆறுபேர். என்னுடைய அடுத்த தம்பியின் பெயர் கருணாநிதி. மற்ற சகோதரர்கள் பெயரும் கருணாகரன், கண்ணதாசன் என தி.மு.கழக தாக்கம் கொண்டிருக்கும். திராவிட இயக்கம் வலுவாக மேலோங்கி வந்த காலத்தில் பிறந்தவர்கள் என்பதால், எங்கள் பகுதியில் அதன் தாக்கம் அதிகம். அப்படித்தான் தமிழ் ஆர்வம், தமிழ் சார்ந்த பெயர்கள், தலைவர்கள் பெயர் சூட்டுவது என மக்களிடம் தாக்கம் செலுத்தியது தி.மு.கழகம். எங்கள் குடும்பத்திலும் அவர் பெயருடன் என் தம்பி இருக்கிறார். இப்படி, மக்களின் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்து நின்று, இன்றைக்கும் உத்வேகமூட்டுகின்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

....பகிர்வார்கள்

## திராவிட இலக்கியமும் நவீன இலக்கியமே!

'திராவிட இயக்க எழுத்தாளர்களின் படைப்புகள் இலக்கியமே இல்லை, அது வெறுமனே பிரச்சாரம்தான்' என்று சில 'மேட்டிமை இலக்கியவாதிகள்' தொடர்ச்சியாகச் சொல்லி வருகிறார்கள். ஆனால், இந்தக் குரலுக்குப் பின்னால் இருப்பது வைதீக மனம்தான், பிற்போக்கு அரசியல்தான் என்னும் விமர்சனக் குரல்கள், இப்போது தமிழ் இலக்கிய வெளியிலேயே அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

மூத்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன், இறப்பதற்கு முன்பு கொடுத்த ஒரு நேர்காணலில்தான், 'அண்ணா போன்ற திராவிட இயக்க எழுத்தாளர்கள் பற்றி அதிகம் பேசாதது தவறு' என்று கூறியிருந்தார். 'உயிர்மை' இதழ் நேர்காணலில் எழுத்தாளரும் கலை இலக்கிய விமர்சகருமான இந்திரன், 'திராவிட இயக்க இலக்கியத்தைப் புறக்கணிக்கும் இலக்கியவாதிகள் சனாதனவாதிகள்' என்று விமர்சித்திருந்தார்.

சமீபத்தில், வெளியாகியிருக்கும் செப்டம்பர் 2024 'உயிர்மை' இதழில் எழுத்தாளர் இமையத்தின் நேர்காணல் வெளியாகியிருக்கிறது. கறுப்பு-சிவப்பு கரைவேட்டியுடன் தன்னை, திராவிட இயக்க எழுத்தாளராக வெளிப்படையாக அடையாளப்படுத்திக் கொள்ளும் இமையம், "திராவிட இயக்க எழுத்தாளர்களின் எழுத்துகளைப் படிக்காமலேயே தாங்கள்தான் நவீனத்துவ எழுத்தாளர்கள் என்று பெருமை பேசுவது தவறு. திராவிட இயக்க எழுத்தாளர்களின் எழுத்துகள் இல்லாமல், நவீன இலக்கியம் என்பது தமிழில் இல்லை. 'பெண் ஏன் அடிமையானாள்?' நூலை எழுதிய பெரியார், திராவிட இயக்க எழுத்தாளர்தானே? அண்ணா எழுதிய 'சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்' நாடகத்திற்கு இணையாக நவீன எழுத்தாளர்களால் வேறு ஒரு நாடகத்தை எழுதிக் காட்ட முடியுமா?" என்று கேட்டிருக்கிறார்.

## ஃப்ளாஷ்பேக்



எம்.ஆர்.திராவிட மணி



புதுச்சேரியில் செயல்வீரர்கள் கூட்டம்!

2007-ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற இளைஞர் அணியின் முதல் மாநில மாநாட்டிற்கு நிதி திரட்டுவதற்காக, "அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும், இன்றைய கழகத் தலைவருமான, மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்கள் புதுச்சேரிக்கு வருகை தந்திருந்தார். இளைஞர் அணிச் செயல் வீரர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட தளபதி அவர்களிடம், முதலியார்பேட்டைத் தொகுதி ஒன்றியச் செயலாளராகப் பொறுப்பு வகித்த நான், பத்தாயிரம் ரூபாய்க்கான காசோலை வழங்கினேன். அந்த நிகழ்ச்சியில் அன்றைய புதுச்சேரி கழக அமைப்பாளர், ஆர்.வி.ஜானகிராமன், இளைஞர் அணி அமைப்பாளர் இரா.சிவா மற்றும் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

**- எம்.ஆர்.திராவிட மணி, தொகுதிச் செயலாளர், முதலியார்பேட்டைத் தொகுதி, புதுச்சேரி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### அறிவுப் பிரச்சாரம் செய்ய வருக!

1954-ஆம் ஆண்டு, காரைக்குடியில் பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகத்தில் முதலாவது ஆண்டுவிழாவில் சிறப்புரையாற்றினார் பேரறிஞர் அண்ணா. "இளைஞர்கள், நாட்டில் கல்வியறிவற்றவர்களைக் கல்வி கற்கும்படிச் செய்ய வேண்டும். மக்களிடையே உலவி வரும் தவறான கருத்தைப் போக்க இளைஞர்கள் முன்வரவேண்டும். இங்கு கம்பனையும் திருஞானசம்பந்தரையும், காரைக்கால் அம்மையாரையும், சில காலத்திற்கு நிறுத்தி வைத்து, நாம் வெளிநாட்டு வரலாற்றை அறிந்துகொண்டால்தான் இன்னும் 10 ஆண்டுகளிலாவது நம்நாடு முன்னேற முடியும்". என அவர் ஆற்றிய உரை பரபரப்பாகப் பேசப்பட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

594

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131